1982 பிப்ரவரி 11]

களை நாம் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் நியமித்து இருக்கிறோம். வேறு எந்தப் போக்குவரத்துக் கழகங்களிலும் இப்படிப்பட்ட நிலைமை இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும், அதையே நம்பிக் கொண்டு இருக்காமல், அதைத் தீவிரமாகப் பார்த்து வருவதற்கான நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கதர் நெசவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம்.

* **வினா எண். 158—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு கதர், பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கதர் நெசவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, ஆம். கதர் நெசவாளர்கள் 500 பேருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அரசு ரூ. 5 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் எத்தனை கதர் நெசவாளர்கள் இருக்கின்றனர் ? எத்தனை பேருக்கு எங்கெந்த இடங்களில் வீடுகள் கட்டப்படவுள்ளன ? அதனுடைய மதிப்பீடு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தின் கீழ் ஏறக்குறைய 6,000 நெசவாளர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலோருக்கு சொந்தத்தில் வீடு இல்லை என்கிற நிலைமையில் உள்ளனர். முதற்கட்டமாக அவர்களில் 500 கதர் நெசவாளர்களுக்கு வீட்டைக் கட்டிக் கொள்வதற்காக அரசு மானியமாக தலா ஆயிரம் ரூபாய் என்கிற அடிப்படையில் 1981–82 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டது. நெசவாளர்கள் வீட்டில் தறி இயங்கவும், வசிக்கவும் போதுமானதாக இருக்கும் வகையில் குறைந்த பட்சம் 300 சதுர அடி இடம் தேவை என்கிற அடிப்படையில் வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு அத்தகைய வீடுகள் கட்டப்படுகின்றன. அப்படிப்பட்ட வீடுகள் கட்ட ரூ. 7,500 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. இதற்காக வங்கியிலிருந்து ரூ. 5,000 கடனாகவும், நெசவாளர்களின் பங்கு ரூ. 1,500 என்கிற அடிப்படையிலும், அரசு மானியமாக ரூ. 1,000 கொடுக்கப்படுகிறது. இந்தத்

[1982 பிப்ரவரி 11

திட்டத்தின் மூலம் தஞ்சை மண்டலத்தில் கும்பகோணம், விழுப்புரம், புதுக்கோட்டை, கரூர் ஆகிய இடங்களிலும், திருப்பூர் மண்டலத்தில் ஈரோடு, திருப்பூர், நாமக்கல் போன்ற இடங்களிலும், மதுரை மண்டலத்தில் நாகர்கோயில், திண்டுக்கல், ஸ்ரீவில்லிப்புத்தூர், கோவில்பட்டி போன்ற இடங்களிலும் வீடுகள கட்ட ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி அவர்கள் சுதேசி இயக்கத்தை பரப்புவதற்காக அனைவரும் கதர் கட்ட வேண்டும், நூல் நூற்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கதர் தத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் இருப்பதால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற கோரிக்கையை அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, காந்திய வழியில் கதர் நெசவாளர்களுக்கு ஆதரவு காட்ட வேண்டுமென்ற எண்ணத்தினால்தான் தமிழக அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன் வந்திருக்கிறது. மத்திய அரசு இதற்கு உதவ முன்வந்தால் நிச்சயமாக இந்த அரசு அதை ஆதரிக்கும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது திண்டுக்கல் பகுதியில் நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த வீடுகளை சின்னாளம்பட்டியில் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, சின்னாளம்பட்டியில் கதர் நெசவாளர்கள் இருந்தால் பரிசீலிக்கப்படும்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவரவர்களே, கும்பகோணத்தில் நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அறிவித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இருக்கின்ற பட்டு நெசவாளர்களுக்கும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, கும்பகோணத்தில் இருக்கிற நெசவாளர்கள் அனைவரும் கதர் பட்டு நெசவாளர்களாக இருப்பதால் அங்கே 100 வீடுகள் கட்ட ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982 பிப்ரவரி 1]

திரு. துரை ராமசாமி : தலைவரவர்களே, கதர் உற்பத்தியில் முதலாவதாக இருக்கிற வெள்ளக்கோவில் பகுதியிலும் வீடு கட்டும் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, 1981—82-ல் 500 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. படிப்படியாக எங்கெங்கு கதர் நெசவாளர்கள் இருக்கிறார்களோ அங்கேயெல்லாம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வயதான ஆதரவற்றவர்களுக்கு வாழ்வளித்துவரும் தனியார் நிறுவனம்.

*வினா எண். 159— திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வயதான ஆதரவற்றவர்கட்கு சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்று வாழ்வளித்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அது மாதிரியான அமைப்பு அரசுத் துறையில் ஏற்படுத்தும் எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : (அ) ஆம். சென்னை மாநகரில், பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-3-ல் ''நண்பர்கள் விரும்பும் கழகம்'' (Friend in Need Society) என்ற பெயரில் ஒரு தனியார் நிறுவனம் 60 வயதுக்கு மேற்பட்ட ஆங்கிலோ இந்திய ஆண், பெண் இரு பாலரையும் பேணி பாதுகாத்துவருகிறது.

(ஆ) இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : தரைவரவர்களே, இந்த நிறுவனத்திற்கு அரசு ஏதாவது உதவித் தொகை வழங்குகிறதா ? எந்த ஆண்டு முதல் வழங்கப்படுகிறது ? தற்போது இந்த நிறுவனத்தில் எத்தனை பேர்கள் தங்கியிருக்கிறார்கள். ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, இந்த நிறுவனத்திற்கு 1910 முதல் ஒவ்வொரு வருஷமும் வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையில் 15,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இந்த நிறுவனத்தில் 24 ஆண்களும், 15 பெண்களும் இருந்து வருகிறார்கள்.